00029

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சிறப்பு விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU6223/ESU4123 – சிறுவர் உரிமைகள்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 24.07.2021 நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

01. சிறுவர் உரிமை தொடர்பான பட்டயம் எது? இந்த பட்டயத்தில் அடங்கியுள்ள உரிமை பிரிவுகளை சுருக்கமாக குறிப்பிடுக.

02. 1925 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் சிறுவர் உரிமை தொடர்பான ஐந்து (5) கட்டளைச் சட்டங்களை பெயரிடுக.

03. சிறுவர்களுக்கெதிரான பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய நான்கு (4) படிமுறைகளைக் குறிப்பிடுக.

04. விசேட தேவையுடைய பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வழங்கும் சேவைகள் மூன்றினை (3) எழுதுக.

05. தத்தெடுத்தல் என்பதால் கருதப்படுவது யாது?

06. விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்விநிலை தொடர்பாக இலங்கை அரசு எடுக்கக்கூடிய் நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக.

07. விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பாக சமுகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் எவை?

08. கோவிட் -19 நிலைமையில் விசேட தேவையுடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு ஆசிரியர் எடுக்கக்கூடிய வழிவகைகள் ஐந்தினை (5) பரிந்துரைக்க.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. i. 'சிறுவர் உரிமைகள்' என்னும் பதத்தினை வரையறுக்க.
(3 புள்ளிகள்)

ii. காலனித்து ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் சிறுவர்களின் நிலையினைப் பற்றி விளக்குக.
(7 புள்ளிகள்)

iii. இலங்கைச் சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்க பிரித்தானிய மேற்கொண்ட உபாயங்களை ஆராய்க.
(10 புள்ளிகள்)

10. i. விசேட தேவையுடைய பிள்ளைகள் யார்?
(4 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதில் பெற்றோருக்குரிய பிரதான பொறுப்புக்கள் மூன்றினை (3) சுருக்கமாக விளக்குக.
(6 புள்ளிகள்)

iii. மேலே நீங்கள் குறிப்பிட்ட பெற்றோரின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?
(10 புள்ளிகள்)

11. "விசேட நிலைமைகளில் உள்ள பிள்ளைகளின் சுகாதாரம், கரிசனை என்பன தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ முடியும்"

i. மேலே கூறப்பட்ட பிள்ளைகளுக்கு உதவுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஐந்தினை (5) குறிப்பிடுக.
(5 புள்ளிகள்)

ii. இந்த நிலைமைகளில் செயற்படுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் எவை?
(5 புள்ளிகள்)

iii. மேலே நீங்கள் குறிப்பிட்ட இடர்பாடுகளை இழிவளவாக்குவதற்காக எடுக்கக்கூடிய வழிமுறைகளை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

12. i. சிறுவர்களை பாதுகாப்பதற்கான உரிமை என்றால் என்ன?
(3 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளின் பாதுகாப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக ஆசிரியர்கள் எடுக்கக்கூடிய உபாயங்கள் மூன்றினையாவது (3) விளக்குக.
(7 புள்ளிகள்)

iii "மதகுருவானவர் பிள்ளைகளின் பாதுகாப்பதற்கான உரிமை பற்றி முக்கிய வகிபாங்கினை வகிக்க முடியும்."

இக்கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? உமது விடையை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

13. "பிள்ளைகளின் பாதுகாக்கும் உரிமையை உறுதிப்படுத்த ஆசிரியரின் வகிபாங்கு எல்லையற்றது"

i. பாதுகாக்கும் உரிமை என்றால் என்ன?

(2 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆசிரியர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளின் படிகளை குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

iii. இந்த நிலைமைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினைக் (03) குறிப்பிட்டு இப்பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

14. i. விசேட தேவையுடைய பிள்ளைகளின் உரிமைகளைப் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் எடுத்த மூன்று (3) பிரதான நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

ii. மேலே குறிப்பிட்டவற்றை அமுல்படுத்துவதில் அரசு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மூன்றினை (3) சுருக்கமாக குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

iii மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நீங்கள் குறிப்பிடும் நான்கு (4) பரிந்துரைகளை குறிப்பிடுக.

(8 புள்ளிகள்)

*"பதிப்புரிமை பெற்றது"*